# அரசறிவியல்

## அரச மாதிரிகளும் அதன் வகைகளும்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education


தேர்ச்சி மட்டம் :- 3.2 அரசு பற்றிய வகைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு அரசு பற்றிய கருத்தியலை விமர்சிப்பர்.

## அரச மாதிரிகளும் அதன் வகைகளும்

“மனிதனை நல்வழிப்படுத்தும் ஒரு தாபனமாகவே அரசு குறிப்பிடப்படுகின்றது. அரசில் ஒருவர் வாழ்வதன் மூலமே நல்லவனாகின்றான். நல்லமனிதன் ஒரு நல்ல அரசில் அன்றி வேறு எங்கும் இருக்க முடியாது. அரசுதரும் சமூக வாழ்க்கையில் ஒரு மனிதன் பங்கு கொள்ளாத வரை அவன் பூரணத்துவம் அடைய முடியாது.”

**குடியரசு நூலில் - பிளேட்டோ**

### அரசின் வகைகள்




தொகுப்பு :- திருமதி.பிரமாலட்சுமி ஜனேந்திரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).
கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கோத்திர அரசு *(The Tribal State System)*

- ஆரம்பகால அரசியல் நிறுவனங்களான இவற்றில் தற்போதைய சிக்கல்மிக்க சமூகங்களைப் போல அரசியல் நிறுவனக் கட்டமைப்பு அல்லது நிறுவனங்களை காணமுடிவதில்லை.
- இங்கு அரசியல் என்ற ஆட்சி அதிகாரங்கள் சமூகத்தினுள் பரந்து காணப்பட்டது.
- இதில் பலம்மிக்க நபர்களால் ஆட்சி தீர்மானம் எடுக்கும் குழு தோற்றம் பெறுவதோடு பெரும்பாலும் குலமானது ஒரு குடும்பத்தின் ஒருவர் என்ற வகையில் அதன் உறுப்புரிமையினைப் பெற்றனர்.
- இக் குழுக்கள் மூலம் குலத்தின் ஒற்றுமையினைப் பேணிக் கொள்ள முடிந்தது.
- குலத்தின் ஆட்சித் தலைமைத்துவ பாத்திரத்திற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் கொண்ட தலைவர்.
- குலத்தின் தலைவருக்கான அதிகாரம் குழுவினுள் அவருக்குள்ள சிரேஸ்ட தன்மை அடிப்படையிலேயே உருவாகின்றது.
- மனிதர்களைப் பற்றி ஆய்வு செய்த ஒருவரின் கருத்துப் படி “இந்தத் தலைவர்கள் ஏனைய குலங்களுடன் செல்வம் மற்றும் மத விடயங்களுக்காக போராடி தமது குழுவுக்கு அனுகூலங்களைப் பகிர்ந்து கொண்டனர்” என குறிப்பிட்டுள்ளார்.
- இங்கு காணப்பட்ட ஒற்றுமை தலைவரின் குடும்ப நிலைமை போன்றதே ஏனைய குடும்ப நிலைமைகளுமாகும்.
- இச்சமூகம் உணவு மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது தொடர்பில் தன்னிறைவு பெற்றிருந்தது.
- கோத்திர அரசுகளில் அரசியல் பயன்பாடுகளின் அடிப்படை பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் அனுஸ்டானங்கள் மற்றும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது.




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கோத்திர அரசு முறைக்கான உதாரணங்கள்

### சிம்பாவே

1. கோத்திரம் "சோனா" 70%
   - மன்னியக்கா Manyika
   - சிசுரு zezru
   - கோர்கோர் Korekore
   - கரங்கா Karanga
   - நடு Nadu
2. மத நம்பிக்கை அரசுகளைத் தீர்மானிக்கும் அந்தக் குழுவின் தலைவருடன் இடம்பெறும்.

ஆண்களே தலைமைத்துவம்.

பரம்பரையாக தலைவர் தெரிவு

### தென்னாபிரிக்கா

"சூலு"

- சாதரண வீடு முதல் மத்திய அரசு வரை ஆதிக்கம்.
- ஆணாதிக்க ஆட்சி முறை
- கோத்திர தலைவன் "பொலிகனி" என அழைக்கப்பட்டான்.
- நீதி அதிகாரம் தலைவனிடம் காணப்பட்டது.

### உகண்டா

"கவாக்கா"

(தீமைகளிலிருந்து காப்பாற்றுபவர்)

- நிலச் சொந்தக்காரன் அரசனே
- அரசனின் அதிகாரம் கிராமத்திலிருந்து மத்திவரை பரந்தது.
- கோத்திரத் தலைவன் அரசன்
- இறந்தவர்களை வணங்கும் வழக்கம்.

## கிரேக்க நகர (புராதன) அரசு

❖ கோத்திர அரசு முறைமையின் பின்னர் அபிவிருத்தி அடைந்து அரசியல் முறைமையில் ஒழுங்கமைந்த முதலாவது அரசு முறையாகும்.

❖ நவீன அரசுகளின் கோட்பாட்டிற்கு தளமாக அமைந்த அரசு முறைமை.

❖ கிரேக்க நகர அரச முறைமை நிச்சயிக்கப்பட்ட சிறிய நில பிரதேசத்தில் ஒழுங்கமைந்த மக்களுடன் கூடிய ஆட்சி முறை மற்றும் வாழ்க்கை முறையினை கொண்டு அபிவிருத்தி அடைந்தது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

❖ கிரேக்கர்கள் அங்கு குடியேறியிருந்த பரம்பரை மற்றும் பழங்குடியினரையும் *(lan and Tripe)* சமூகமாக கொண்ட நிலத்தில் ஒழுங்கமைந்தால் அரசியல் வாழ்வின் மையமாக அமைந்தன.

❖ கிரேக்க நகர அரசைச் சூழ அச்சமூகத்தின் அரசியல் பொருளாதாரம், அறிவு சார்ந்த மற்றும் ஒழுக்க ரீதியான வாழ்க்கை அம்சங்கள் சூழ்ந்திருந்தன.

❖ கிரேக்க நகர அரசுக்கு உரித்தான இரு கருத்தியல்கள்.
- நகர அரசு அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த பிரிவுகளாக இருந்தமை.
- அவை ஒவ்வொன்றும் சுயாதீனமான பிரிவுகளாக இருந்தமை.

❖ வேறு நகர அரசுகளுடன் அந்நியமாதல் கிரேக்கர்களுக்குப் பழக்கமில்லாததாக இருந்துது.

❖ மக்கள் தொகை மற்றும் ஆள்புல ரீதியாக வரையறுக்கப்பட்ட சிறிய அரசியல் அலகுகளாக இருந்தமை.

❖ இங்கு மக்களிடையே தமது அரசு தொடர்பில் மிக உயர்வான உணர்வு காணப்பட்டது.

❖ நகரத்தின் மதமே அனைத்துப் பிரஜைகளினதும் மதமாக இருந்தது.

❖ பெண்கள், அடிமைகள், குடியேற்ற வாசிகளுக்கு பிரஜாவுரிமை கிடைக்கவில்லை.

❖ பிரஜை என்பது சொத்துடைய ஆண்களுக்கான வரப்பிரசாதமாகியது.

❖ நேரடி ஜனநாயகம் நிலவிய ஏதென்ஸில் பிரஜைகள் என்பவர்கள் மக்களின் செயற்பாடுகளுக்காக உயிரோட்டமான பங்களிப்பு எதிர்பார்க்கப்பட்டது.

❖ தனிநபராட்சி முறை, சில்லோராட்சி முறை நேரடி ஜனநாயக ஆட்சி முறை, ஏகாதிபத்திய ஆட்சி முறை முதலான அரசியல் மாதிரிகள் இங்கு அபிவிருத்தியடைந்திருந்தன.

❖ கிரேக்க நகர அரசுகள் ஜனநாயகம் மற்றும் பிரஜைகளுக்கான அரசியல் செயற்பாடுகளை மையப்படுத்தி தோற்றம் பெற்றமையினாலேயே அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அரசாட்சி முறை (முடியாட்சி முறை)

- ❖ அரசாட்சி என்பது பெரும்பாலும் பரம்பரையாக அரசாட்சிக்கு உரிமை கோரும் தனிநபரினால் நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி முறையாகும்.
- ❖ இது உலகம் முழுவதும் கண்டு கொள்ளப்பட்ட அரச மாதிரியாகும்.
- ❖ அரசன் / அரசி ஆட்சிக்கு வருவது சம்பிரதாயப்படியாகும்.
- ❖ தெய்வீக வழியுரிமைக் கோட்பாட்டுகளில் அரசனுக்கு அரசாட்சி செய்வதற்கு இறைவனால் அதிகாரம் கிடைத்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் சர்வதிகார அரசாட்சி முறைகளில் தெய்வீக வழியுரிமை அரசாட்சி பண்புகள் காணப்பட்டன.
- ❖ அரசாட்சியில் ஆட்சியாளருக்கு எல்லையற்ற அதிகாரம் கிடைத்ததோடு அவரின் / அவளின் தனிப்பட்ட கட்டளைகளால் உருவானது.
- ❖ சர்வதிகார அரசாட்சியில் அரசியல் நிறுவனங்கள் குறைவான அபிவிருத்தியிலேயே காணப்பட்டன. சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை, நிருவாகம் மற்றும் யுத்த அதிகாரம் மன்னன் / இளவரசியிடம் குவிந்து காணப்பட்டமையே இதற்கு காரணமாகும்.
- ❖ அரசாட்சியில் “பிரஜைகள்” என்ற எண்ணக்கரு காணப்படவில்லை. இதற்கு பதிலாக கீழ்ப்பட்டவர்கள் (அடிமைப்பட்டவர்கள்) என்றே காணப்பட்டது.
- ❖ கீழ்ப்பட்டவர்களுக்கு நவீன பிரஜைகளைப் போல உரிமைகள் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்களுக்கு கடமைகளே காணப்பட்டன.

## தாராள ஜனநாயக அரசு (லிபரல் ஜனநாயக அரசு)

- ❖ லிபரல் ஜனநாயக அரசியல் மூலக் கொள்கைகளையும் முதவாளித்துவ பொருளாதார மூலக் கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டு லிபரல் ஜனநாயகம் ஒழுங்கமைந்துள்ளது. லிபரல் ஜனநாயகத்தின் கருத்துப்படி அரசென்பது மக்களால் உருவாக்கப்பட்ட உயர் சமூக நிறுவனமாகும்.
- ❖ தனிப்பட்ட வகையில் தனி மனிதனினதும் பொதுவாக சகல மனிதர்களினதும் முன்னேற்றத்தைச் சாத்தியமாக்கி கொள்வதற்கே மக்கள் அரசை உருவாக்கிக் கொண்டனர்.

தொகுப்பு :- திருமதி.பிரமாலட்சுமி ஜனேந்திரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).
கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

❖ லிபரல் வாதம் ஒருவகை நிலையான பொருளாதார முறையுடன் இணைந்த கருத்தியலாகும்.

❖ லிபரல் ஜனநாயகக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் முறையை முகாமைப்படுத்தி தனியார் சொத்துரிமை, சுயாதீனமான முயற்சி, திறந்த சந்தை போன்ற முதலாளித்துவ கொள்கையினூடாக பொருளாதார முறைமையும் முகாமைப்படுத்தப்பட வேண்டும்.

❖ மக்களாட்சி தொடர்பான எண்ணக்கரு இதன் கீழ் முக்கியம் பெறுவதோடு மக்கள் பிரதிநிதிகளால் செய்யப்படும் ஆட்சி பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்கம் இருத்தல் லிபரல் ஜனநாயக அரசியல் முறையின் அடிப்படைப் பண்பாகும்.

## லிபரல் ஜனநாயகத்தின் பண்புகள்

1. தடைகளற்ற சுதந்திரம்
2. சமத்துவம்
3. பெரும்பான்மை கட்சி
4. மக்களாட்சி
5. யாப்புறுவாதம்
6. சட்டத்தின் ஆட்சி
7. நீதித்துறை சுயாதீனம்
8. பொறுப்புடைய அரசாங்கம்
9. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள்
10. போட்டிகரமான கட்சி முறை
11. ஊடகச் சுதந்திரம்
12. சமூகப் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்ளல்

தொகுப்பு :- திருமதி.பிரமாலட்சுமி ஜனேந்திரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).
கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தடைகளற்ற சுதந்திரம்

வெளித் தடைகளற்ற விதத்தில் மனிதன் தத்தமது தனித்துவங்களினை மேம்படுத்திக் கொள்வதற்கான நிலைமையை தடைகளற்ற சுதந்திரமாக கருதமுடியும். சீலியின் கருத்துப்படி "அரசாங்கத்தின் கூடுதலான அதிகாரத்திற்கு எதிரானது என்ற வகையில் தடைகளின்மையே சுதந்திரமாகும்" என்றார். எனவே தனிமனிதர்கள் சுதந்திரத்தை பூரணமாக அனுபவிப்பதற்கான தடைகளற்ற தன்மையினதாகும் என்ற உணர்வு நிலை பொருந்திய செயற்பாடாகும்.

## சமத்துவம்

"புரட்சிக்கு மூலவேர் சமத்துவமின்மையே" என்ற அரிஸ்டோட்டிலின் கூற்றுக்கு அமைய சமூதாய சமத்துவமின்மையை களைய வேண்டும், "சட்டத்தின் முன் யாவரும் சமம்" என்பதும் சமத்துவத்தை வலிமைப்படுத்துகின்றது. எல்லோரும் சமம் என்று சொல்லும் போது எல்லோரும் ஒரே தன்மையுடையவரென்பது கருத்தாகாது. அதாவது தனித்தனி ஆன்ம பாவமுடையவர்கள்.

## பெரும்பான்மை ஆட்சி

மக்கள் விருப்பின்படி அதிகமான வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளால் பெரும்பான்மை ஆட்சிக்கு வலுச் சேர்க்கப்படும். லிபரல் ஜனநாயகத்தின் கருத்துக்களை பெரும்பான்மை வாக்குகளின் மூலம் ஆமோதித்து முடிவுகளை எட்டுவதற்கு பெரும்பான்மை அவசியமாகின்றது.

## மக்கள் ஆட்சி

தாராள ஜனநாயக கோட்பாட்டின் படி இறைமையின் ஊற்று மக்களாவார். மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுவதுடன் மக்கள் விரும்பாத போது ஆட்சியாளர்களை மாற்றவும் தத்துவமுடையவர்களாகின்றனர். சட்ட இறைமை பிறப்பிக்கும் சட்டங்கள் மக்களின் விருப்பிற்கு இசைவானதாக அமைந்திருக்கும்.

## யாப்புறு வாதம்

அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கம் ஒழுங்கமைக்கப்படுவதோடு அரசியல் யாப்பு பற்றிய கரிசனை காணப்பட வேண்டும். யாப்புசார் மூலக் கொள்கைக்கேற்ப அரசாங்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதனோடு இணைந்த ஏனைய மூலக் கொள்கை யாதெனில் யாப்புசார் சட்டம் நாட்டின் அடிப்படைச் சட்டமாக கருதப்படுவதாகும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சட்டத்தின் ஆட்சி

தன்னிச்சையான எதேச்சை எண்ணமுடைய ஆட்சியாளர்களிடமிருந்து ஒவ்வொரு தனிமனிதர்களின் சுதந்திரத்தையும் பாதுகாத்துப் பேணுவதற்குள்ள மிகச் சிறந்த வழி முறைமையே சட்டவாட்சியாகும். சட்டத்தின் முன் சகலரும் சமம் என்பதும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பு சகலருக்கும் உரித்தாக வேண்டும் என்பதும் இதன் பொருளாகும். இதன்படி ஆள்வோரும் ஆளப்படுவோரும் சட்டத்தின் முன் சமமானவர்களாக கருதப்படுவர்.

## நீதித்துறை சுயாதீனம்

லிபரல் ஜனநாயகத்தின் அத்தியாவசியப் பண்பாக காணப்படுகின்றது. தனிமனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் யாப்புச் சட்டத்துக்கு முரணான வகையில் சட்டவாக்கம் செய்வதனை தடுப்பதும் நீதிப்புனராய்வு அதிகாரம் கொண்ட சுதந்திரமான நீதித்துறை நிலவுதல் என்பவற்றின் மூலம் நீதித்துறை சுயாதீனம் பாதுகாக்கப்படும். இதனை வலுச் சேர்க்க நீதிபதிகளை சட்டத்திற்கேற்ப நியமித்தல் அவர்களின் சேவைப்பாதுகாப்பு, திறந்த முறையிலான வழக்கு விசாரணை, சட்ட நிறைவேற்று துறையிலிருந்து வலுவேறாக்கம், நீதித் தீர்ப்புகளை முறையற்ற விதத்தில் விமர்சிப்பதை தவிர்த்தல் போன்ற நிபந்தனைகள் நீதித்துறை சுயாதீனத்தைப் பேணுகின்றது.

## பொறுப்புடைய அரசாங்கம்

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளால் உருவான அரசாங்கம் மக்களுக்கு பொறுப்புக் கூறும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். பாராளுமன்ற ஆட்சி முறையில் மந்திரி சபையின் கூட்டுப் பொறுப்பும் சட்டத்துறைக்கு நிறைவேற்றுத்துறையின் பொறுப்புக் கூறும் தன்மையூடாக பொறுப்புடைய அரசாங்கமாக செயற்படும்.

## சுதந்திரமான தேர்தல்கள்

லிபரல் ஜனநாயகத்தின் அடித்தளமாக காணப்படுவதே பிரநிதித்துவம். இப் பிரதிநிதித்துவத்திற்கு பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான பொறிமுறை தேர்தலாகும். இத் தேர்தல்கள் காலத்திற்கு காலம் நடத்தப்பட வேண்டும். இதன் மூலம் தொடர்ச்சியான ஏக ஆட்சித்தன்மை நீக்கி ஆட்சியில் அனுபவங்களைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

## போட்டிக் கட்சி முறை

லிபரல் ஜனநாயக அரசானது போட்டிகரமான அரசியல் கட்சி முறையினை அடிப்படையாக் கொண்டுள்ளது. ஜனநாயகத்தையும் அரசியல் கட்சிகளையும் தனித் தனியாக பிரிக்கமுடியாத அளவுக்கு ஒன்றுடன் ஒன்று பிணைந்ததாகும். போட்டிகரமான அரசியல் கட்சிகளால் மக்களிடம் அரசியல் தெளிவு கிடைக்கும். கருத்துக்களுக்கு மாற்றுக் கருத்துக்களும் அதனை மதிக்கும் தன்மையும் பிறக்க வேண்டும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஊடக சுதந்திரம்

லிபரல் ஜனநாயகத்தின் மற்றுமொரு பண்பு ஊடாக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தனிமனிதன் சட்டத்திற்கு இணங்க சிந்திப்பனவற்றை கருதுபவற்றை வெளியிடுவதற்கான கருவகியாக ஊடகங்கள் காணப்படுகின்றது. எனவே இவ்வூடகங்கள் அழுத்தங்களுக்குட்படாத வகையில் சுதந்திரமானதாக காணப்பட வேண்டும்.

## அமுக்க குழுக்களின் செயற்பாடு

அரசாங்க அதிகாரத்தில் செயற்படும் ஆட்சியாளர்களுக்கு சமூகத்திலிருந்து மனிதனின் தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அழுத்தங்களை கொடுக்கும் காத்திரமான பணியை அமுக்கக் குழுக்கள் / அழுத்தக் குழுக்கள் செய்கின்றன. இவ்வமுக்கக் குழுக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்க வேண்டும்.

## சமூகப் பன்மைத் தன்மையை ஏற்றுக் கொள்ளல்

லிபரல் ஜனநாயக அரசின் முறையில் பன்மை தன்மை கொண்ட மக்கள் சமூகம் வாழ்கின்றனர். பன்மைத் தன்மையில் பன்மை கருத்துக்கள் வெளிப்படும். அக்கருத்துக்களை தாங்கிய சமூகத்தை ஏற்றுக்கொண்டு ஆட்சி அமைக்க வேண்டும் போன்றவை லிபரல் ஜனநாயகத்தின் பிரதான பண்புகளாக காணப்படுகின்றது.

---

## சமவுடமைவாத அரசு

- கோட்பாட்டு மற்றும் கருத்தியலடிப்படையில் 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற சமவுடைமை அரசு மாதிரி கால்மாக்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்டு 20ம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்ததாகும்.
- முதலாளித்துவ மற்றும் லிபரல்வாத அரசு மாதிரிகளுக்கு மாற்றீடாக அமைந்தது.
- இது முதலாளித்துவத்தினால் சுரண்டப்பட்ட தொழிலாளர்களுக்காக முன்வைக்கப்பட்ட அரசு மாதிரி.
- உழைப்பு சுரண்டலற்ற, வகுப்பு வாதம் இல்லாத சமூகத்தை கட்டியெழுப்புவதே இதன் பிரதான நோக்கமாகும்.
- பௌதிக வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்வதற்காக மனிதனின் அடிப்படைத் தேவைகளை சமமான வகையில் பெற்றுக் கொடுத்தல்.

தொகுப்பு :- திருமதி.பிரமாலட்சுமி ஜனேந்திரன் ஆசிரியர் - அரசறிவியல் (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).
கணினி வடிவமைப்பு :- திரு.பா.சாயிரூபன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- ❖ தனியார் முயற்சிக்குப் பதிலாக அரச ஆதிபத்தியம் நிலை நிறுத்தப்படல்.
- ❖ வர்க்கங்களற்ற சமூகத்தில் அடக்குமுறை கருவியான அரசு தேவையற்றது.
- ❖ முற்றிலும் லிபரல் ஜனநாயக அரசிலிருந்து வேறுபட்டது.
- ❖ இதன் உரிமம் தொழிலாளர் வர்க்கமும் தாழ்த்தப்பட்ட மக்களின் கட்டளையுமாகும்.
- ❖ பலகட்சி முறைக்குப்பதிலாக ஒரு கட்சி முறை காணப்படுதல்.
- ❖ சமவுடைமை அரசு முறையினைப் பரிசீலித்துப் பார்த்த நாடுகளாக ரஷ்யா, சீனா, கியூபா, வடகொரியா, வியட்னாம், கம்போடியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் சில நாடுகள்.
- ❖ இறுதியாக சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் சமவுடைமை அரசு வீழ்ச்சியடைந்ததன் பின்னர் அதற்கு மாற்றீடாக லிபரல் ஜனநாயகத்தினை கருதவில்லை.

---------------------------

## பாசிஸவாத அரசு

- ❖ பாசிஸவாதம் என்பது அரசின் உயரிய தன்மை *(Glorification of the state)* சிரேஸ்ட தன்மை மற்றும் எதேச்சதிகாரம், இனவாதம், இராணுவவாதம் என்பவற்றை அடிப்படையாக கொண்ட அரசியல் கருத்தியலாகும்.
- ❖ இது முதலில் 1920, 1930 தசாப்தங்களில் இத்தாலி மற்றும் ஜேர்மனியில் முசோலினி, ஹிட்லர் என்போர் பிரதான தலைவர்களாக விளங்கினர். இதில் இத்தாலியில் பெனிட்டோ முசோலினியும் ஜேர்மனியில் அடோல்ப் ஹிட்லரும் ஐரோப்பிய பாசிஸவாதத்தின் பிரதான தலைவர்களாக செயற்படனர்.
- ❖ பாசிஸ வாதத்தின் பிரதான கருத்தியலாக இருப்பது இனவாத பார்வையில் அரசு தொடர்பாக விபரிக்கும் “இனத்தின் சிருஸ்டியே அரசாகும்” என்ற ஹிட்லரின் கருத்தாகும்.
- ❖ பாசிஸத்தில் அரசு மற்றும் இனம் என்பது சமமானதாக காணப்படுகின்றது.
- ❖ “அரசு நிகரற்ற ஸ்தாபனம்” , “சர்வ வல்லமை பொருந்திய ஸ்தாபனம்” என்பவை பிரபல்யமான வரைவிலக்கணங்களாகும்.
- ❖ நீட்சே முன்வைத்த “மாமனிதர்” *(superman)* என்ற எண்ணக்கரு பாசிசத்தின் அடிப்படை கருத்தியலில் பெருமளவில் தாக்கம் செலுத்துகின்றது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- ❖ அரசு சமூகத்திற்கு மேலாலுள்ள நிறுவனமாகும்.
- ❖ அரசு நிலையானது இதற்கு ஆரம்பமோ முடிவோ முக்காலம் பற்றிய விபரிப்போ கிடையாது.
- ❖ அரசின் அதிகாரத்திற்கு கட்டுப்படுவதிலேயே தனிநபர் விடுதலை தங்கியுள்ளது.
- ❖ அரசே ஆட்சியாளனாகும்.
- ❖ ஆட்சியாளன் சர்வதிகாரமானவன்.
- ❖ அறிவுடைய, பண்புடைய, மனித மாண்புடைய, வீரமுடைய, இராஜ தந்திரமுடையவனாக ஆட்சியாளன் காணப்படுவதினால் தலைமைத்துவ வழிபாடு முக்கியம் பெறுகின்றது.
- ❖ அரசியல் ஸ்தாபனங்கள் தலைமைத்துவ புகழ் பரப்புவது.
- ❖ சட்டம் என்பது ஆட்சியாளனின் விருப்பமாகும்.
- ❖ மக்களின் அரசியல் பங்குபற்றல் நிராகரிப்பு ஆயுதபலம் உச்சநிலை.
- ❖ சமூக நோக்கம் நிராகரிப்பு ஆகியன இடம்பெறும்.

## காலனித்துவ அரசு

- ❖ இந்த அரசு மாதிரி 16ம் நூற்றாண்டின் பின்னரே அபிவிருத்தி அடைந்தது. காலனித்துவ அரசு என்பது
  "பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல் போன்ற ஐரோப்பிய காலனித்துவ அதிகாரங்களுக்கு நேரடியாக கீழ் நிலைப்பட்டிருந்த ஐரோப்பா அல்லாத சமூகங்களில் அபிவிருத்தியடைந்த மாதிரியாகும்."
- ❖ 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சிக்குட்படுத்திய 1815 வரை முழு நாடும் காலனித்துவத்திற்குட்பட்டது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## காலனித்துவ அரசால் ஏற்படுத்தப்பட்ட சமூக அரசியல் மாற்றங்கள்

| அரசியல் மாற்றங்கள் | சமூக மாற்றங்கள் |
|---|---|
| 1. அரசின் ஆளுகையில் பாரிய பிரதேசம் | 1. இராணுவ செயற்பாடுகளுடன் பழக்கப்படுதல் |
| 2. யுத்த செயற்பாடுகளால் இராணுவ அரசுக ளாகவே அபிவிருத்தியடைந்திருந்தன. | 2. அடக்குமுறை எதிர்ப்பும் தடுப்பு முறை எதிர்கொள்ளலும் |
| 3. தேசிய, சமூக மட்ட புரட்சிகளை அடக்க யுத்தசக்தி ஆயுதபடை பேணுதல் | 3. மத்திய மயப்படுத்திய ஆட்சிக்கு பழக்கப்படுதல். |
| 4. மத்திய மயப்படுத்தப்பட்ட கட்டமைப்பு அதிகாரம் | 4. காலனித்துவ அரசின் பிரதிநிதிகளானமை |
| 5. வரி மூலமாக நிதி சேர்ப்பு | 5. காலனித்துவ அரசுக்கு சேவை செய்தல் |
| 6. சட்டம் ஒழுங்கமைப்பை பேணிக் கொள்ளல். | 6. நிலம், நிந்தகம், பதவிகள் நிதி ரீதியான சலு-கைகள் கிடைத்தமை |
| | 7. வரி செலுத்துதல் சட்டத்திற்கு ஒழுங்கமைந்திருத்தல் |

### காலனித்துவ அரசின் பண்புகள்

❖ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் அனைத்து வர்க்கங்களையும் உள்ளடக்கிய முழு சமூகத்தினையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

❖ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் வர்க்கங்களுக்கிடையிலான உறவுகளினால் தீர்மானிக்கப்படுவதில்லை. அந்நிய நாடொன்றின் ஆளும் வர்க்கம் குடியேற்ற நாட்டு மக்களோடு கொள்ளும் உறவின் வெளிப்படையாகவே அமைந்துள்ளது.

❖ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டின் எந்த வர்க்கத்தையும் தனது ஆட்சியின் பங்காளர்களாக கொண்டிருந்ததில்லை.

❖ காலனித்துவ ஆட்சி உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தனக்கு சார்பாக உபயோகித்துக் கொள்ளும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- ❖ காலனியின் உயர் குழாங்களை நிலப்பிரபுத்துவ வர்க்கமும், முதலாளித்துவ வர்க்கமும் காலணித்துவத்திற்கு எதிராக கிளர்ந்தெழும் சந்தர்ப்பமும் உண்டு.
- ❖ காலனித்துவ அரசு குடியேற்ற நாட்டு வர்க்கங்களுக்கிடையில் ஐக்கியம் இணக்கப்பாடு ஏற்படுவதை தடுக்கும்.
- ❖ காலனித்துவ நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டுவதில் நேரடியாக ஈடுபடுதல்.
- ❖ காலனித்துவ அரசு, பொலிஸ், கிளைக்கூடம் போன்ற ஒழுங்குமுறை அரச யந்திரங்களை கொண்டு அடக்கு முறையைப் பிரயோகிக்கின்றது.

## பின்காலனித்துவ அரசு

பின் காலனித்துவ அரசு என்ற எண்ணக்கரு பாகிஸ்தானிய எழுத்தாளரான ஹம்ஷா அலவி *(Hamza Alavi)* என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1972ம் ஆண்டு New Left Review சஞ்சிகையில் வெளியிட்ட "பாகிஸ்தான் பங்களாதேஷ் சமூகங்களில் பின் காலணித்துவ அரசு" (State in post colonial societies Pakistan and Bangaladesh) என்ற கட்டுரையில் அறிமுகமாகியது.

## பின்காலனித்துவ அரசின் பண்புகள்

- ❖ பின்காலனித்துவத்தில் காணப்பட்ட அரசுகள் காலனித்துவ கட்டமைப்புகளை மேலும் முன்னோக்கி கொண்டு சென்றுள்ளது.
- ❖ ஜனநாயகம் பரிமாற்றம் சாத்தியமானதாகவோ அல்லது நிலைத்திருக்கத்தக்க வகையிலோ நடைபெறவில்லை.
- ❖ இராணுவ புரட்சிகின் மூலம் ஜனநாயகவாட்சி அமைப்புகளை மாற்றியமைத்தல் மற்றும் அதிகாரவாத ஆட்சிமுறை உருவாதல் இச்சமூகத்தின் பொதுப் பண்புகளாகும்.
- ❖ வலுவான மற்றும் பலமிகு இராணுவம் சிவில் நிருவாகக் கட்டமைப்பொன்று அரச இயந்திரத்தின் மையமாக தொழிற்படுவதாகும். இவை காலனித்துவ ஆட்சிக்காலத்தில் கட்டியெழுப்பப்பட்டவைகளாகும். காலனித்துவ வாதத்தில் பெற்றக் கொண்ட அரசியல் சுதந்திரத்தினால் இந்தக் கட்டமைப்புக்கள் மாற்றமடையவில்லை. இவை கட்சி மற்றும் சிவில் அரசியல் நிறுவனங்களுக்கு மேலான மிகவும் அதிகாரம் மிக்கவையாகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

❖ அரசியல் கட்சி சிவில் நிறுவனங்களுக்கு மேலான அதிகாரமுடைய இராணுவம் மற்றும் படிநிலைவாத கட்டமைப்பொன்று தோற்றம்பெறல் பின்காலனித்துவ அரசு ஜனநாயக பரிமாற்றத்தினை நோக்கிய பயணத்தில் காணப்படும் கட்டமைப்பு ரீதியான தடையாகும்.

"பின்காலனித்துவ அரசு" பற்றி ஹம்சா அலவி என்ற பாகிஸ்தானியர் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். 3ம் உலகின் அரசியல் பற்றி எழுதுவோர் இக்கட்டுரையினை அடிக்கடி பயன்படுத்தி வருகின்றனர். (The state in post colonial societies Pakistan and Bangladesh, New left Review, No 74) கட்டுரையின் மேலதிக தகவலைப் பெறமுடியும்.

## நவதாராண்மைவாத அரசு

### பொருளாதார பின்புலம்

❖ அரசின் பொதுநலவாதம் 3ம் உலகத்தில் இருந்து விலகிச் செல்லலின் ஆரம்பமும், சமவுடைமை உலகதில் தோற்றம் பெற்றமையினால் உலக முதலாளித்துவ பொருளாதார மற்றும் அரசியல் இயக்கங்களுக்கு உலகம் முழுவதும் இடையூறுகளற்ற நிலையினை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

❖ இந்த பின்புலத்தில் தேசிய அரசுகளின் தேசிய எல்லைகளை தாண்டி சந்தை பொருளாதார முறையொன்று தோற்றம் பெற்றது.

❖ இந்த பணப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ பொருளாதார முறை முறையாக செயற்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு "உலகமயமாக்கல்" என்ற எண்ணக்கரு தோற்றம் பெற்றது.

❖ முதலாளித்துவ பொருளாதார முறையின் ஆரம்பத்தில் தலையிடாக் கொள்கையே காணப்பட்டது. இதன் மூலம் அரசு பொருளாதார செயற்பாடுகளில் தலையிடாத அதாவது தடை செய்வதில்லை என்பதே கொள்கையாக இருந்துது.

❖ ஆரம்பகால தலையிடாக் கொள்கையானது நலன்புரிவாத கொள்கையின் பரவலோடு நலிவடையச் செய்யப்பட்டது.

❖ 1960 தசாப்தங்கள் ஆகும் போது அரச நலன்புரி வாதம் படிப்படியாக பின்னிலை அடைந்து முகாமைத்துவ அரசு எண்ணக்கரு பரவியது.

❖ இவ்வாறு தாராள அரசின் அரசாங்கத்தை நிருவகித்ததோடு மட்டுப்படுத்தப்படுவது நவ தாராள அரசின் பிரதான பண்பொன்றாகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரம் சர்வதேச மயப்படுத்தப்படுவதன் மூலம் உலகத்தின் அரசியல் தளம் பாரிய மாற்றத்திற்கு உட்பட்டதோடு சந்தைப் பொருளாதாரத்திற்கு இணையாக உலகளாவிய கலாசாரமும் விருத்தியடைந்தது.

- இவ்வாறான நிலையினால் தேசிய அரசு நாம நிருவாக நிலைக்கு தள்ளப்பட்டதோடு அரசு பொருளாதார செயற்பாடுகளில் விலகியிருந்தாலும் கட்டாய அம்சமாகியது. அதாவது தேசிய அரசுகள் தேசிய எல்லைகளைக் கடந்து பரவலடைந்துள்ளது. சந்தைகளை வழிநடத்துவதற்கான எந்தவொரு வாய்ப்பும் தேசிய அரசுகளுக்கு இல்லை.

- அரசானது சந்தைப் பொருளாதாரத்திற்கு இடம் கொடுக்கும் வகையில் தேசிய பொருளாதாரத்தை திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதோடு சர்வதேச பொருளாதாரத்தை இயக்கும் முழுமையான பொறுப்பினை உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் சர்தேச வர்த்தக சங்கம் மற்றும் பல்தேசியக் கம்பனிகள் போன்ற சர்வதேச அமைப்புகளால் மேற்கொள்ளப்படும்.

## அரசியல் பின்புலம்

- ரொபட் நோசிக், பெட்றிக் வோன் ஆகியோர் நவதாராண்மைவாத கருத்துக்களை வெளியிட்ட அரசியல் சிந்தனையாளர்களாவார்.

- எல்லாத் தனிநபர்களும் குறிப்பிடத்தக்க உரித்துடையோர்.

- நபர்களின் அரசியல் உரிமை பாதுகாக்க அரச அதிகாரம் குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் ரொபேட் நோசிக் *(Robert Nozik)*.

- அரச அதிகாரம் பொலிஸ் அதிகாரத்திற்கு மேற்பட்ட ஒன்றல்ல.

- நபர்களின் சொத்துரிமை மக முக்கியமானது.

- குறைவிருத்தி நாடுகளில் அரசுகளின் செலவுகளை இல்லாது செய்தல்.

- சர்வதேச வல்லரசுகளில் உதவி பெறும் அரச சார்பற்ற வலையமைப்பு காணப்படும்.

- முதலாளித்துவ பொருளாதார முறை விருத்திக்கு அழுத்தம் கொடுக்கும் தலையிடாக் கொள்கையே அது சிதைந்து போவதற்கும் காரணமாக அமைந்ததோடு இதற்கு மாற்றீடாக அரச நலன்புரி கொள்கை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதோடு இதற்கு மாற்றீடாக அரச நலன்புரி கொள்கை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதோடு முதலாளித்துவ சமூக பொருளாதார முறைமை மீண்டும் உயிரூட்டப்பட்டு நிலையான சமூக முறையாக மாறியது.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

❖ இத்தகைய முதலாளித்துவ முறை நிலை பெறலானது நீண்ட காலமாக இருந்து சவால்விடுத்த சமவுடைமை வாதத்தினை பலவீனப்படுத்தியது.

## குறைந்தபட்ச அரசியல் எண்ணக்கரு

❖ 20ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் குறைந்தபட்ச அரசு (*Minimalist State*) என்ற எண்ணக்கருவின் தோற்றத்தோடு ஆரம்பமானது.

❖ குறைந்தபட்ச அரசு கொள்கையினால் மீண்டுமொரு முறை அரசின் பணிகளை வரையறுத்தல் என்ற குறைத்தலை காணமுடிகிறது.

❖ எனினும் இது தலையிடா அரசு போலன்றி சமூக பொருளாதார விடயங்களில் விலகியிருத்தல் அல்லது தலையிடாமல் இருப்பது அல்ல.

❖ இது அரச தலையிடாவாதம் மற்றும் நலன்புரிவாதம் ஆகிய இரண்டுக்கும் இடையிலான நிலையாகவே குறைந்தபட்ச அரசினை இனங்காண முடியும்.

## வினாக்கள்

1) கிரேக்க அரசின் பண்புகளை விளக்குக?
2) பிரதிநிதித்துவ அரசாங்கம் செயற்படுவதற்கு தேவையான (தாராள ஜனநாயகவாத) அடிப்படை பண்புகளை ஆராய்க.
3) சமவுடைமை அரசு மாதிரிகளை ஆராய்க.
4) பாசிஸவாத அரசின் பண்புகளை விளக்குக.
5) காலனித்துவ அரசின் அரசியல் சமூக பண்புகளை விளக்குக.

இவை 10 புள்ளிகளுக்காக விளக்கப்படவேண்டும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk